1974 மார்ச் 12]

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாசன வசதிகள்.

*384—வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டுக்குப் பின்னால் திருச்சி மாவட்டத்தில் பாசன வசதிகளைப் பெருக்கிட அரசு மேற்கொண்டுவரும் முக்கிய நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கியதாகவும், வறட்சிப் பகுதியாகவும் இருக்கக்கூடிய அரவக்குறிச்சியிலே பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு நொய்யலாறு திட்டத்தை எப்பொழுது அரசு மேற்கொள்ளும்? அதற்கு விரிவான திட்டம் எப்பொழுது போடப்படும் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருச்சி மாவட்டம் முழுவதிலும் என்ன என்ன திட்டங்கள் என்ற விவரம் இங்கு அவையில் வைக்கப் பட்டிருக்கிறது. தொகுதிவாரியாகக் கேட்டால் விவரம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டதைப் பற்றி, மானியம் வரும்போது விவாதிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, காவிரியில் வெள்ளம் வருகின்ற நேரத்தில், நிறையத் தண்ணீர் கடலிலே சென்று வீணாகக் கலக்கிறது. அந்தச் சமயத்தில் வடிகால் வாய்க்கால் திட்டம் அமைத்து வீணாகும் தண்ணீரைப் புஞ்சைப் பகுதியில் உள்ள ஏரிகளில் நிரப்பினால் இப்பொழுதுள்ளதை விட இன்னும் அதிகமாகப் பாசன வசதியைப் பெருக்க முடியுமே, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காவிரியில் புதிய பாசன வசதித் திட்டத்தை மேற்கொள்ள முடியாது என்று அங்கத்தினருக்கே தெரியும். காரணம், நீரைப் பற்றிய தகராறு இருக்கிறது. இன்றைக்கு அங்கு வருகின்ற வெள்ளத்தைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர் எழுப்ப ரூ. 2 கோடிக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக இந்த ஆண்டு வேலை தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயறு வகைகள் சாகுபடி

*385 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

@230-235—ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.